1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :

(அ) ஒரு அதிகாரி.

(ஆ) இல்லே. இவரை மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அறநிலேயங்களால் மருத்துவ மனைகள் திறப்பு.

*வின எண். 125—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

அரசினர் உதவியோடு தனிப்பட்ட அறநிலேயங்கள் மருத்துவ மனை தொடங்கும் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை தொடங்க எத்தனை விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநருக்கும் அரசுக்கும் 15 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) தூத்துக்குடி அனல் மின் நிலேயம் 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலேவர் : நீங்கள் சீரோ அவர் (Zero hour) உண்டு என்று நினைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்காதீர்கள். நமக்கு சீரோ அவர் கிடையாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நமக்கும் உண்டு. நான் நீண்ட விவாதம் நடத்தப் போவதில்லை. ஒரு பாயின்ட் மட்டும் சொல்லிவிடுகிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு தேவைப்படும் 'கன்வேயர் பெல்ட்' 5 கோடி ரூபாயில் செய்வதற்கான ஆர்டரை சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மின்சார வாரியம் வேறு ஒரு தனியார் நிறுவனத்திற்கு அந்த ஆர்டரை கொடுக்கப் போவதாகத் தெரிகிறது. அப்படி அந்த ஆர்டரை தனியார் நிறுவனத்திற்கு கொடுக்காமல் அரசு நிறுவனமான சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கேள்வியை குறுகிய கால வினாவாகவோ அல்லது 41ஆவது விதியின் கீழோ கேட்டிருந்தால் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லியிருப்பார்கள். திடீரென்று தாங்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கு அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்?

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின் லிப்டுகள் சரிவர இயங்காமை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் உள்ள 4 லிப்டுகளும் சரியாக வேலை செய்யவில்லை. எம்.எல். ஏ-க்கள் செல்லும்போது பாதியிலேயே நின்று விடுகின்றன. அதனால் உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற ஒரு நிலை வந்துவிடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே லிப்டுகள் சரியாக வேலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை இந்த அவையில் வந்து சொல்லி, அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றில்லை. சட்டமன்றச் செயலாளரிடமே இதைத் தாராளமாகச் சொல்லலாம். அவர்களிடம் சொல்லி, நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த அவையிலே நீங்கள் குறிப்பிடுவது நியாயம். செயலாளர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்; அவருடைய அறையில் சொன்னாலே வேலை நடந்துவிடும்.